சுருக்கம்

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை – அறிவிப்பு – கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் பராமரிப்பு மற்றும் தடுப்பூசி சேவைகள் – குறுஞ்செய்தி மூலமாக நினைவூட்டல் திட்டம்– ஆணை வெளியிடப்படுகிறது.

---

மருத்துவம் – மக்கள் நல்வாழ்வு (ப்பி2) துறை

அரசாணை (ப) எண்.1219

நாள் : 22.11.2021,
பிலவ, கார்த்திகை 06,
திருவள்ளுவர் ஆண்டு 2052

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண் 81061/த.ஊ/இ5/2021, நாள் 14.09.2021 மற்றும் 01.10.2021.

*****

ஆணை:

2021–22ஆம் ஆண்டிற்கான, மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு அமைச்சர் (மருத்துவம் – மக்கள் நல்வாழ்வு) அவர்களால் தமிழக சட்டமன்றப் பேரவையில் கீழ்க்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது :–

"கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கான தடுப்பூசி சேவைகள் குறுஞ்செய்திகள் மூலமாக நினைவூட்டும் திட்டம் வலுப்படுத்தப்படும்."

2. பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநர் தனது கடிதத்தில், உலகளாவிய தடுப்பூசித் திட்டம் (UIP) தமிழ்நாட்டில் 1985 ஆண்டு முதல் நடைமுறைபடுத்தப்பட்டதாகவும், இத்திட்டத்தின் மூலம் ஆண்டுதோறும் சுமார் 10.12 இலட்சம் கர்ப்பிணித்தாய்மார்கள் மற்றும் 9.23 இலட்சம் குழந்தைகள் ஆகியோர் பயனடைந்து வருகிறார்கள் என்றும், தடுப்பூசி திட்டமானது குழந்தைகளை தடுப்பூசியினால் தடுக்கக்கூடிய நோய்களிலிருந்து பாதுகாக்கிறது என்றும், தமிழ்நாட்டில், தடுப்பூசி இலக்கானது சுகாதார தகவல் மேலாண்மை திட்ட (HMIS) ஆய்வின் படி 95% எனவும், தேசிய குடும்ப சுகாதார ஆய்வு–4 (2015–2016)–ன்படி 69.7% எனவும், தேசிய தொற்று நோயியல் நிறுவனத்தின் (NIA) ஆய்வின்படி 75%–த்தினை அடைந்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

3. பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநர், மேலும், தனது கடிதத்தில், மாநிலத்தில் 100% தடுப்பூசி இலக்கினை அடைய தாய் சேய் நலம்

சார்ந்த சேவைகளுக்கான அனுகல்களை மேம்படுத்த சமூக மட்டத்தில் தேவையான முயற்சிகள் தமிழக அரசால் எடுக்கப்பட்டு வருகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

4. பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநர், தனது கடிதத்தில், அரசின் புதிய அறிவிப்பின்படி, தாய்மார்களிடையே தடுப்பூசிகள் பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்துவதற்காகவும் (குறுஞ்செய்தி மூலமாக), பிரசவத்திற்கு முன் மற்றும் பிரசவத்திற்கு பின் பராமரிப்பு, பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு மற்றும் அவர்களுக்குரிய தடுப்பூசிகளை உரிய காலத்தில் செலுத்துதல் ஆகிய சுகாதாரச்சேவைகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள குறுஞ்செய்தி வாயிலாக நினைவூட்டல் திட்டம் அறிவிக்கப்பட்டது என்றும், இத்திட்டத்தின்படி பிக்மி (PICME) வலைதளத்தில் பதிவு செய்யப்பட்ட அனைத்து தாய்மார்களும், இச்சேவையினை பயன்படுத்திக்கொள்ள குறுஞ்செய்தி வாயிலாக நினைவூட்டல் அனுப்பப்படும் என்றும், குறைந்தபட்சம் ஒரு தாய்மாருக்கு 20 குறுஞ்செய்தி விழிப்பூட்டல்கள் மூலம் இச்சேவை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது என்றும், இச்சேவைகள் முழுமையாக பூர்த்தி அடையும் வரை இந்த குறுஞ்செய்தியானது கீழ்கண்டவாறு தொடர்ந்து தாய்மார்களுக்கு அனுப்பப்படும் என்றும் தெரிவித்துள்ளார் :-

| குறுஞ்செய்தி நினைவூட்டல் அடிப்படையில் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கான தடுப்பூசி சேவைகள் | | | |
|---|---|---|---|
| வ. எண் | குறுஞ்செய்தி வகை | குறுஞ்செய்தி கால அட்டவணை | குறுஞ்செய்தி எண்ணிக்கை |
| AN Mothers | | | |
| 1.1 | கர்ப்பகால பார்வைகள் | 16 வது, 20 வது, 26 வது, 30 வது, 34 வது வாரம் | 5 |
| 1.2 | கடைசி மூன்றுமாத கால நினைவூட்டல்கள் | 36 வது, 37 வது, 38 வது, 39 வது வாரம் | 4 |
| PN Mothers | | | |
| 2 | பேறு காலத்திற்கு பிந்தைய தாய்மார்கள் / வீட்டளவிலான பிறந்த குழந்தைகள் பராமரிப்பு / 0– தவணை | 1–வது, 3–வது, 7–வது, 14–வது, 21–வது, 28–வது மற்றும் 42–வது நாள் | 5 |
| 3 | குழந்தைகளுக்கான தடுப்பூசிகள் | 6–வது, 10–வது & 14–வது வாரம், 10–வது & 16–வது மாதம் | 6 |
| மொத்த குறுஞ்செய்திகளின் எண்ணிக்கை | | | 20 |

மேலும், இத்திட்டத்தினை செயல்படுத்த ஆண்டுதோறும் சுமார் 22,00,000/– ரூபாய் செலவு ஏற்படும் என்றும் இத்திட்டத்தினை UNICEF–ன் நிதியுதவிடன் செயல்படுத்தும் வகையில், அதற்கான கருத்துரு, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறையின் 07.09.2021–ம் நாளிட்ட கடிதத்தின்படி UNICEF–ற்கு அனுப்பப்பட்டு, அதற்கான நிதிஒதுக்கீடு ரூ.22,00,000/– (ஓரண்டிற்கு) 14.09.2021 அன்று அவ்வலுவலக வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது என்றும், இத்திட்டத்தினை நடைமுறைபடுத்தும் பொருட்டு உரிய ஆணை வழங்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. மேலே, பத்தி 4ல் உள்ள பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்து, பிக்மி (PICME) வளைதளத்தில் பதிவு செய்யப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்கள், பிரசவத்திற்கு முன் மற்றும் பிரசவத்திற்கு பின் பராமரிப்பு, பச்சிளங் குழந்தைகள் பராமரிப்பு மற்றும் அவர்களுக்குரிய குறைந்தபட்சம் 20 தடுப்பூசி சேவைகள் குறித்து குறுஞ்செய்தி மூலமாக நினைவூட்டல் திட்டத்தினை ஆண்டிற்கு ரூபாய் 22,00,000/– செலவில் செயல்படுத்தவும், மேலும் இத்திட்டத்தை வரும் காலங்களிலும் UNICEF-ன் நிதியுதவியுடனே செயல்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் அரசு ஆணையிடுகிறது.

6. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.எண்.44328/ நிதி (சுகாதாரம்–I)/ 2021, நாள்: 20.10.2021–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ.ராதாகிருஷ்ணன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை,
சென்னை–600 006.
இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறை,
சென்னை–600 006.
இயக்குநர், மருத்துவக் கல்வி இயக்குநரகம், சென்னை –600 010.
இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறை (தொ.அ.ஈ),
சென்னை–600 006.
குடும்ப இயக்குநர், தேசிய நலக் குழுமம், சென்னை–600 006.
மாநில கணக்காயர், சென்னை – 600 018.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை – 600 018.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–600 035.
அனைத்து இணை இயக்குநர்கள், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள்.

<u>நகல்:</u>

சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம்,
சென்னை–600 009.
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள

மேலாண்மைத் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை–600 009.

சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு மருத்துவம் – மக்கள் நல்வாழ்வு அமைச்சர் அலுவலகம், சென்னை–600 009.

தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலாளர், சென்னை–600 009.

கூடுதல் தலைமைச் செயலாளரின் (நிதி) முதன்மை தனிச் செயலாளர், சென்னை–600 009.

நிதி (சுகாதாரம்–1) துறை, சென்னை – 600 009.

மருத்துவம்–மக்கள் நல்வாழ்வு (எஸ்)த் துறை, சென்னை – 600 009.

மருத்துவம்–மக்கள் நல்வாழ்வு (தகவு)த் துறை, சென்னை – 600 009.

இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

22/11/21

பிரிவு அலுவலர்

22/11/21